பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 21உ (7—11—67) செவ்வாய்   வெளியூர்: ஐப்பசி 22உ (8—11—67) புதன் [இதழ்: 120

நாடாளுமன்றக் கூட்டம் துவங்குகிறது

நாடாளுமன்றக் கூட்டத் தொடர், இத்திங்கள் 13-ம் நாள் துவங்கும்.

42 புதிய மசோதாக்கள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, சென்ற கூட்டத் தொடரில் முடிவு செய்யப்படாமல் இருக்கும் 25 மசோதாக்களும் ஆய்வுக்கு வரும்.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் ஆட்சிமொழி மசோதா தவிர மேலும் சில முக்கிய மசோதாக்கள் இந்தக் கூட்டத் தொடரில் வரவிருக்கின்றன.

விறுவிறுப்பு மிக்க வாக்குப் பதிவு

வாக்காளர்கள் காட்டிய ஆர்வம்

கழகத் தோழர்களின் அயராத பணி

அமைதி காப்பதில் அதிகாரிகள் ஒத்துழைப்பு

சென்னை, நவ. 7—

தி. மு. கழக வேட்பாளர் முரசொலி மாறன் உள்ளிட்ட எழுவர் போட்டியிடும் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலின் வாக்குப் பதிவு, இன்று காலை 8-மணியளவில் துவங்கியது.

615 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன; ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் மூன்று பெட்டிகள் வீதம் மொத்தம் 1,845 வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன; இன்று மாலை 5-மணி வரையில் வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

6 சட்டமன்றத் தொகுதிகளும் 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்; அந்த அதிகாரிகள், அந்தந்தப் பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகள் ஒவ்வொன்றுடனும் 15 நிமிடத்திற்கு ஒருமுறை—வாக்குப் பதிவு நேரத்தில்—தொடர்புகொண்டுள்ளனர்; அந்தந்தப் பகுதிகளில் அவர்கள், சுற்றிவந்து நிலைமைகளைக் கவனித்த வண்ணமிருக்கின்றனர்.

போலீசார் சிறப்புமிக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, வாக்குப் பதிவு நேரத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாமலிருக்க ஆவனசெய்து, கண்காணிப்புடன் இருக்கின்றனர்; போலீசு உயர்மட்ட அதிகாரிகள் தொகுதிகள் தோறும் சென்று சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

வாக்குப் பதிவு விறுவிறுப்பு

மயிலைத் தொகுதியிலும், திருவல்லிக்கேணித் தொகுதியிலும் வாக்குப் பதிவில் விறுவிறுப்பு காட்டப்பட்டது: வாக்குப் பதிவு செய்வதில் வாக்காளர்கள் காட்டிய ஆர்வம், கழகத்தின் மாபெரும் வெற்றிக்கு அடிகோலுவதாக இருந்தது.

மற்ற தொகுதிகளில் காலையில் சிறிது மந்த நிலை காணப்பட்டாலும் நேரமாக ஆக, வாக்குப் பதிவில் சுறுசுறுப்பு காணப்பட்டது; இத்தொகுதிகளின் உட்பகுதிகளில் தான் வாக்குப் பதிவு உச்சநிலையில் இருந்தது!

கழகத் தோழர்களின் அயராப் பணி

கடந்த பதினைந்து நாட்களாகத் தேர்தல் பிரசாரம்—ஊர்வலம்—வாக்குச் சேகரிப்பு ஆகியவைகளில் ஈடுபட்டுத் தேனீக்களெனச் சுற்றித்திரிந்து அயராது பாடுபட்ட கழகத் தோழர்கள்—ஆதரவாளர்கள் அனைவரும், இன்று அமைதியே உருவாக வெற்றிக்கு வழிவகுக்கும் வாக்குப் பதிவில் உற்சாகம் காட்டினர்; வாக்குப் பதிவுக்கு வகுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உள்ளிட்டும்—எல்லை மீறுமலும் அவர்கள், வாக்காளர்களை அழைத்துச் செல்வதிலும்—வாக்குப் பதிவு எவ்வாறு செய்வது என்பதை விளக்கிக் கூறி ஆவன செய்வதிலும் முனைந்து உழைத்துக் கொண்டிருக்கின்றனர்!

மாவட்டச் செயலாளரும்—உடன் தோழர்களும், தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள்—மாநகராட்சி உறுப்பினர்கள்—வட்ட, பகுதிச் செயலாளர்கள் அனைவரும் வழிகாட்டிகளாக இருந்து—தொண்டர்களைக் கண்காணித்து—வாக்குப் பதிவு ஒழுங்காக நடைபெறுவதில் உற்சாகத்துடனும் ஊக்கமுடனும் உழைத்துக் கொண்டிருக்கின்றனர்!

இன்று பதிவாகும் வாக்குகள் அனைத்தும், நாளை காலை 8-மணிக்கு எண்ணத் துவங்குவர். மயிலாப்பூர்—தியாகராயநகர்—சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளுக்கான வாக்குகள் பச்சையப்பன் கல்லூரியிலும், ஆயிரம்விளக்கு—எழும்பூர்—திருவல்லிக்கேணி ஆகிய தொகுதிகளுக்கான வாக்குகள் நேரு ஸ்டேடியத்திலும் எண்ணப்படும். இந்த இரண்டு இடங்களிலும், ஒவ்வொரு தொகுதி வாக்குகளும் தனித் தனியே ஒரே நேரத்தில் எண்ணப்படும்; 6-இடத்தில் வாக்கு எண்ணிக்கை ஒரே நேரத்தில் நடைபெறும். ஒவ்வொரு இடத்திலும் 15 மேசைகள் இருக்கும்; மேசைக்கு ஓர் ஏஜெண்டு வீதம் தமது ஆட்களை வேட்பாளர் வைத்துக்கொள்ளலாம். மயிலைத் தொகுதிக்கு 14 மேசைகள் தான் இருக்கும். ஒவ்வொரு மேசையிலும் வாக்குகளை எண்ணும் அதிகாரி ஒருவரும், இரு உதவியாளர்களும் இருப்பார்கள்.

இந்த 6-இடங்களிலும் எண்ணப்படும் வாக்குகளின் எண்ணிக்கை மாநகராட்சி ஆணையருக்குத் தெரிவிக்கப்படும்; ஏற்கனவே அவர், அஞ்சல் மூலம் வந்த வாக்குகளை எண்ணி வைத்துக்கொண்டிருப்பார்; பின்னர், தமக்குக் கிடைக்கும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கையையும் சேர்த்துத் தேர்தல் முடிவை அறிவிப்பார். மாலை 6-மணிக்குள் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவதூறான தேர்தல் சுவரொட்டி-- துண்டு அறிக்கைகள்

நால்வர் கைதாயினர்

சென்னை, நவ. 7—

கோடம்பாக்கம் பகுதியில், 'காங்கிரசு எம்.எல்.ஏ. ஜெயராஜை வெட்டியவர் அமைச்சர் கருணாநிதியின் சொந்தக்காரர்' என்ற முறையில் ஒரு சுவரொட்டியை வெளியிட்டிருக்கிறார்கள்.

அந்தச் சுவரொட்டியில் அச்சகத்தின் பெயரும் இல்லை—வெளியிட்டவரின் பெயரும் இல்லை; இப்படிச் சுவரொட்டி ஒட்டினால் தேர்தல் சட்டப்படி ஒன்றரை ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படலாம்.

இந்த சுவரொட்டிகளை வைத்திருந்த இரு காங்கிரசுக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிடப்பட்ட அந்தச் சுவரொட்டியில் ஜெயராஜை வெட்டுவதற்கு சதி செய்த குற்றவாளி வரதராச பிள்ளையின் இரண்டாவது மனைவி கருணாநிதியின் மனைவிக்கு அக்காள்—என்று எழுதப்பட்டிருக்கிறது.

அமைச்சர் கருணாநிதியின் மனைவிக்கு அக்காளுமில்லை—தங்கையுமில்லை; இரண்டு அண்ணன்மார்களே உண்டு.

இதுபோலவே மயிலாப்பூர்—தியாகராயநகர் பகுதிகளிலுள்ள பிராமணர்களிடையே அவர்களைத் தூற்றும் வகையில் 'தஞ்சை திராவிடர் கழகம்' என்ற அமைப்பு வெளியிட்டதாக ஒரு துண்டு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது; அந்த அறிக்கையிலும், அச்சகத்தின் பெயரைப் போடவில்லை.

அந்தத் துண்டு அறிக்கைகளை விநியோகித்ததாக இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அக்டோபர் புரட்சியின் துரோகிகளாம்!

சோவியத் தலைவர்கள் மீது பீகிங் ஏடுகளின் பாய்ச்சல்!

ஹாங்காங், நவ. 7—

"இரஷ்யாவின் முன்னாள் தலைமையமைச்சர் குருஷ்சேவ் நவினப் புரட்சிப் பிற்போக்குவாதத்தின் நடுத்தர நாடாக சோவியத் யூனியனை மாற்றினார்; உலகப் பிற்போக்குச் சக்திகளின் மற்றொரு தலைமையகமாக்கினார்!

"இன்றைய சோவியத் தலைவர்களாக பிரஷ்நேவ், கோசிஜின் ஆகியோர், அக்டோபர் புரட்சியின் துரோகிகள்!

"இவ்விதமிருக்க, அக்டோபர் புரட்சி நாள் கொண்டாட அவர்களுக்கு ஏது உரிமை?

"மார்க்சிய – லெனின் வாதிகளும், உலகம் முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான புரட்சிவாதிகளும் அமைக்கும் வரலாற்று நீதிமன்றத்தின்

(4-ம் பக்கம் பார்க்க)

முதலமைச்சர் ஒப்புதல்!

கல்கத்தா, நவ. 6—

மேற்கு வங்க ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டணி அமைச்சரவையின் பலத்தைக் கண்டறிய சட்டமன்றத்தைக்கூட்ட முதலமைச்சர் அஜாய் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார்.

பதவி விலகல் ஏற்பு

மேற்கு வங்க உணவு அமைச்சர் டாக்டர் பி. சி. கோஷ் பதவி விலகலை ஆளுநர் ஏற்றுக்கொண்டார்.

ஆளுநர் கடிதம் தமக்குக்கிடைத்ததாக டாக்டர் கோஷ் கூறினார்.

அமைச்சர் மு. கருணாநிதி மீது......

அவதூறுகப் பழிசுமத்தும் அறிக்கை வெளியிட்டனர்-- வழக்குத் தொடர ஏற்பாடு

சென்னை, நவ. 6—

பொதுப்பணி அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மீது அவதூறுகப் பழிசுமத்தும் விதமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டதாக காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் ஜெயராஜ் மீதும், அந்த அறிக்கையை வெளியிட்ட 'நவசக்தி' கௌரவ ஆசிரியர், வெளியீட்டாளர் ஆகியோர் மீதும் வழக்குத் தொடர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

தென் சென்னை இடைத் தேர்தலையொட்டி சென்னை நகரில் ஜெயராஜ் பற்றிய உண்மைகளை விளக்கும் சுவரொட்டி ஒன்று கழக ஆதரவாளர்களால் ஒட்டப்பட்டிருந்தது; அதுபற்றி 6—11—67 காலை, 'நவசக்தி' ஏட்டில், காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் ஜெயராஜ், பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதியவர்கள்மீது அபாண்டமான பழி சுமத்தி அறிக்கை ஒன்று வெளியிட்டிருந்தார்.

அறிக்கையை எழுதிய ஜெயராஜ் மீதும், அதனை வெளியிட்ட 'நவசக்தி' கௌரவ ஆசிரியர் ஈ. வெ. கி. சம்பத், வெளியீட்டாளர் தனுஷ்கோடி ஆகியோர்மீது வழக்குத் தொடர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

நகராட்சித் தேர்தல்கள்

அமைச்சர் அறிவிப்பு

சென்னை, நவ. 7—

"தமிழகத்திலுள்ள 84 நகராட்சிகளுக்கான தேர்தல்கள், 1968 பிப்ரவரித் திங்கள் இறுதி வாரத்தில் நடைபெறும்; குடந்தை நகராட்சிக்கு மட்டும் மார்ச் இரண்டாவது வாரத்தில் நடைபெறும்"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் செ. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

"கோவை மாவட்டத்தில் பவானிசாகர், சேலம் மாவட்டத்தில் மேட்டூர்; மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல்; நெல்லை மாவட்டத்தில் குற்றாலம்—ஆகிய நான்கு 'டவுன்ஷிப்'புகளில் நகரசபை தேர்தல் நடைபெருது; உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்

(4-ம் பககம் பார்க்க)

நிர்வாகத் திறமை எவருக்கு இல்லை?

காங்கிரசு ஆட்சியின் வேதனைமிக்க சான்றுகளை பறைசாற்ற வேண்டுமா?

'அமைதி குலைந்தது' எனப் பழி சுமத்துவது பொருத்தமற்றது--அறிஞர் அண்ணா விளக்கம்

'தி.மு. கழகத்திற்கு நிர்வாகத் திறமை இல்லை'—'தி.மு. கழக ஆட்சியில் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன' என்ற காங்கிரசுத் தலைவர் காமராசரின் கூற்றை மறுத்து, முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேற்கோள்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டிக் கூறியதாவது:—

"'அண்ணாதுரைக்கு நிர்வாகத் திறமை யில்லை' என்கிறார் காமராசர்!

எனக்கு நிர்வாகத் திறமை உண்டா இல்லையா என்பதற்குக் காலம் பதில் சொல்லட்டும்!

'அரிசி கிடைக்கவில்லை' என்றிருந்த நிலைமையை மாற்றி ரூபாய்க்குப் படி அரிசி கிடைக்கச் செய்தோம்! திறமை மிகுந்த இவரது கட்சிக்காரர் பிரம்மானந்த ரெட்டியால், இந்த அளவுக்குச் செய்ய முடியவில்லையே!

"விசாகப்பட்டணத்திலும் வால்டேரிலும் அரிசி இல்லாத தீபாவளி! மக்களுக்குப் பங்கீட்டு அட்டைகள் கொடுக்கப்பட்டிருந்தும் பங்கீட்டுக் கடைகளில் அரிசி இல்லாததால், வெறுங் கையுடன் திரும்பினர்! இன்னும் பல ஊர்களில் இதே நிலைமை நீடிக்கிறது!"

—இது தந்திச் செய்தி

அமோகமாக அரிசி விளைச்சல் ஏற்பட்டுள்ள ஆந்திரத்தில்தான் இந்த நிலைமை!

அமோகமாக விளைந்தும், அங்கே பங்கீட்டுமுறை முறிந்துவிட்டதாகச் செய்தி கூறுகிறது—இந்தத் திறமை எனக்கு இல்லை!

எனக்கிருக்கும் திறமையெல்லாம் அரிசி உற்பத்தியை அதிகரித்து—அப்படிக் கிடைக்கிற அரிசியை ஓரவஞ்சனை செய்யாமல் எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்வதுதான்!

"'இந்து' பத்திரிகை வெளிவராது நின்றுவிட்டதே—இவர்கள் ஆட்சியில்?' என்கிறார்கள்! 'இந்து' பத்திரிகை என்ன—ஏழையின் கஞ்சிக்கு வேண்டிய உப்பா?

காங்கிரசு ஆட்சிக் காலத்தில், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையும் மூடப்பட்டு பிற மாநிலங்களுக்குக் கொண்டுபோய் அச்சிட்டார்களே — நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தார்களே—அந்தப் பத்திரிகைகளை மூடிய நேரத்தில் தொழிலாளர்களுக்கு என்ன பதில் சொன்னார் காமராசர்? காமராசர் அப்போது முதலாளி பக்கத்தில்தானே நின்றார்?

நாங்கள் தொழிலாளி பக்கத்தில் நின்றோம்! இன்றும் நாங்கள் தொழிலாளிகளுக்குத்தான் உதவி செய்து வருகிறோம்!

ஆனால் தொழிலாளர்கள் எவரும் அமைதியைக் கெடுக்க விரும்பினால் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்! நாங்கள் அமைதியைக் காப்போம்!

துலுக்கப்பட்டியிலே, காமராசரின் நண்பர்கள் நடத்துகின்ற தொழிற்சாலைத் தகராறில்—தடை செய்யப்பட்டிருந்த இடத்தில் கழகச் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் நுழைந்தார் என்றார்கள்; என்ன செய்வதென்று கேட்டார்கள்; 'கைது செய்யுங்கள்' என்றேன்—கைது செய்யப்பட்டார்; விருதுநகர் போலீசுக் கொட்டடியிலே அடைபட்டுக் கிடந்தார்; சமரசம் ஏற்பட்டதும், அந்த வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார்!

இத்தகைய உதாரணம் இந்தியா முழுவதிலும் வேறு எங்கும் கிடைக்காது! இதைவிட நீதியாக — நியாயமாக இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் ஒரு நிலையைக் காண முடியாது!

முன்னாள் மேயர் எஸ். கிருஷ்ணமூர்த்தி 200 தொழிலாளர்கட்குத் தலைமைதாங்கி என் வீடு நோக்கி ஊர்வலமாக வந்துகொண்டிருப்பதாகத் தகவல் சொன்னார்கள்; 'அதை அனுமதிப்பதா? தடுக்கலாமா?' என்று போலீசு அதிகாரிகள் கேட்டனர்; 'தடுக்காதீர்கள்; ஊர்வலத்தை அனுமதியுங்கள்' என்றேன்; 'அவர்கள் மனு எதுவும் கொடுத்தால் வாங்கி வையுங்கள்' என்று சொன்னேன்! என்னிடம் சொன்னால் நியாயம் கிடைக்கும் என்று நினைக்கிறார்கள்— அதனால்தான் வருகிறார்கள்!

எல்லா இடங்களிலும் தொழிற்சாலைகள் மூடிக்கிடப்பதாகச் சொல்கிறார் காமராசர்!

கோவையிலே ஆறு — ஏழு நெசவாலைகள் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் போதிய ஆதாயமில்லாமையாலும் மூடிக்கிடந்தன—காங்கிரசு ஆட்சிக் காலத்தில்; அத்தொழிலாளர்கள் வந்து முதலமைச்சரைக் கேட்டனர்; பக்தவத்சலம் என்ன சொன்னார்?—'நானா மூடினேன்? மூடிய முதலாளிகளிடம் போய்க் கேளுங்கள்' என்று!

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும், முதற்பணியாக முதலாளிகளையும், தொழிலாளர்களையும், பொருளாதார நிபுணர்களையும் அழைத்துப் பேசினோம்; இது பற்றி ஆராய்ந்தோம்; பொருளாதார நிபுணரான டாக்டர் லோகநாதனிடம் சொல்லி ஆய்வு நடத்தும்படியும் அறிக்கை தரும்படியும் கேட்டுக் கொண்டோம்; அவர் கொடுத்த அறிக்கையின்பேரில் ஒன்றரைக் கோடி ரூபாய் இந்த ஆலைகளுக்குக் கிடைக்கும்படிச் செய்தோம். இந்த ஆலைகளைத் தவிர, மற்றவை திறக்கப்பட்டு நல்ல வண்ணம் இயங்கிவருகின்றன; தீபாவளி போனசு முதலியவையும் அவற்றின் தொழிலாளருக்குக் கிடைத்தன.

மூடப்பட்டுள்ள மூன்று ஆலைகள் திறக்கப்பட்டு — அவற்றுக்குக் கடன் உதவி கிடைக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம்; அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; விரைவில் அவையும் திறக்கப்படும்.

ஆக, இவர்கள் காலத்தில் மூடப்பட்டவை, எங்கள் காலத்தில் திறக்கப்பட்டன!

இப்போது சென்னையில் நடைபெறும் சில தொழிற் தகராறுகள், தீபாவளி காலத்தில் எப்போதும் நடக்கக்கூடியவையே! போனசுக் கோரிக்கைகளின் பேரில் இருதரப்பிலும் பிடிவாதமாக இருப்பார்கள்—அப்புறம் சமரசம் ஏற்படும்!

இதைக் குறிப்பிட்டு, எங்கள் ஆட்சியில் தொழிற்சாலைகள் மூடப்படுவதாகக் காமராசர் சொல்வது எப்படிப் பொருத்தமான வாதமாக இருக்க முடியும்?

பம்பாயிலே விமானம் ஓட்டுபவர்கள் வேலை நிறுத்தம் செய்வதாக இருக்கிறார்கள்; இதற்கு அண்ணாதுரையின் அரசா காரணம்?

காமராசரின் காங்கிரசு ஆளுகின்ற டில்லியில்தானே போலீசுக்காரர்கள் பத்து நாள் வேலை நிறுத்தம் செய்தார்கள்? அவர்களை அடக்க வேறு போலீசைக் கொண்டுவர வேண்டியதாயிற்று. சவான் வீட்டு முன் அந்தப் போலீசார் மறியல் செய்யவில்லையா?

ஆந்திராவின் தலைநகர் ஐதாராபாத்திலே அரசுப் போக்குவரத்து பஸ் ஊழியர்கள் 45 நாள் வேலை நிறுத்தம் செய்தார்களே — இராணுவத்தைக் கொண்டு அங்கு பஸ்களைவிட முயற்சித்தார்களே--கண்ணீர்ப் புகையும் விட்டார்களே—இவையெல்லாம் யாருக்கும் தெரியாதா?

கோவை—சிங்காநல்லூர் பகுதியில் மூன்று மாதமாக உண்ணா நோன்பு, மற்றும் வேலை நிறுத்தம் ஆகிய கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் கிளர்ச்சியை நிறுத்திக் கொண்டு வேலைக்குத் திரும்பினர் எனத் தகவல் ஒன்று கூறுகின்றது.

"கோவை எஞ்சினீயரிங் தொழிற்சாலைகளில் நடந்துவந்த கிளர்ச்சிகள் கைவிடப்பட்டன" என்று மற்றொரு செய்தி கூறுகிறது.

அக்டோபர் 29-ம் தேதி முதல் சென்னைத் துறைமுகத்திலும் வெளியேயும் கனிப் பொருள் ஏற்றுமதி—இறக்குமதிப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், தாங்கள் நடத்திவந்த கிளர்ச்சியை நிறுத்தினர்!

இப்படிப் பல தகவல்கள் வந்த வண்ணமிருக்கின்றன!

எங்கேயும் வேலை நடக்கவில்லையென்பதோ அமைதி குலைந்துவிட்டதென்பதோ உண்மைக்கு மாறானதாகும்! இப்படிச் சொல்லி தி. மு. கழக அரசின் மீது பழியைப் போடுவதும் தவறாகும்!

காமராசருக்கு நான் ஒரு அறைகூவல் விடுக்கிறேன்—தேர்தல் முடிந்த பிறகு வேண்டுமானாலும் தமிழக அரசின் சாதனைகளையும் மற்ற மாநிலங்களில் காங்கிரசு அரசுகள் சாதித்துள்ளவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்க ஓர் நிபுணர் குழுவிடம்விட நான் தயாராக இருக்கிறேன்."

நெருக்கடியான கட்டத்தில் உலகம்!

ரோம், நவ. 7—

"வரலாற்றில் இதற்குமுன் எப்போதும் இருந்திராத அளவுக்கு மிக அதிகமான மக்கள், போதிய உணவு கிடைக்காமல் அவதியுறுகின்றனர்!

"பட்டினி, ஊட்டச் சத்துக் குறைவு ஆகியவற்றை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில், உலகம், புதிய நெருக்கடியான கட்டத்தை எட்டியிருக்கிறது!"

--பி. ஆர். சென்

கூட்டுறவு இயக்கம் தோல்வியடைந்துவிட்டால்..!

சென்னை, நவ. 7—

"கூட்டுறவுத் துறையில் உள்ள தவறுகளை மறைப்பதற்கு, அரசியல் கட்சித் தொடர்பைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது!

"பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டு ஒருவருக்கொருவர் பழகுவதன் மூலம் அரசியல் கட்சி வேறுபாடுகளையும் மனமாச்சரியங்களையும் போக்க வேண்டும்!

"கூட்டுறவு இயக்கம் நாட்டில் தோல்வியடைந்துவிட்டால், பொதுவுடைமை இயக்கம்தான் அடுத்ததாக வரும்! 'பொதுவுடைமை இயக்கம்' என்ற எண்ணம் தோன்றியபின், அதன் விளைவுகள் என்ன என்பதை யாரும் எண்ணிப்பார்க்கத் தேவையில்லை! அந்த விளைவுகளை யாரும் விரும்பி வரவேற்கமாட்டார்கள்!"

---முதலமைச்சர் அண்ணா

(கூட்டுறவு வாரத் துவக்க விழாவில்)

விளைவுகளை எண்ணிப்பார்க்கவில்லை

தவறான கொள்கையை மக்கள் மீது திணிக்க மத்திய அரசு முயற்சிக்கிறது

தமிழர்களைப் பொறுத்து இந்தி அந்நிய மொழியே!

சென்னை, நவ. 7—

"இந்திய அரசு, தனது தவறான கொள்கையை மக்கள்மீது திணிப்பதற்காகச் சக்திவாய்ந்த இராணுவத்தை வைத்திருக்கிறது! ஆகவே ஆங்கில நீடிப்புப் போராட்டம் நடத்துவது சுலபமானதாக இருக்காது!

"வட இந்தியர்களை எனக்கு நன்றாகத் தெரியும்; அவர்கள் இந்தியைத் திணிப்பதற்காகக் கடுமையாகப் போராடுவார்கள்!

"ஆங்கில நீடிப்புக்காக நாம் நேரடி நடவடிக்கை எடுக்கக் கூடாது--உண்மை நிலையைத் திறமையாக எடுத்துச்சொல்லிப் பிரச்சாரம் நடத்த வேண்டும்!

"போராட்டத்தில் தயக்கம் காட்டக் கூடாது! மிகவும் பலம் வாய்ந்த இராணுவத்தை எதிர்த்து நிற்கும் போர் வீரனைப்போல் நாம் நம்மைக் கருதிக்கொண்டு போராட வேண்டும்! 'ஆங்கிலம் நீடிப்பதற்காகப் போராடுவோம்' என்று நாம் ஒவ்வொருவரும் உறுதி ஏற்கவேண்டும்!

"இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்கள், இந்தியை ஆட்சி மொழியாக்கினால் ஏற்படக்கூடிய விளைவுகளை எண்ணிப்பார்க்கவில்லை! இந்தியை அவர்கள் கற்றுக் கொண்டுவிட்டதைப்போல்—தமிழர்களும் என்றோ ஒருநாள் கற்றுக்கொண்டு விடுவார்கள் என்று அவர்கள் கருதுகிறார்கள்! ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரையில், இந்தி ஒரு அந்நிய மொழியே!"

--இராசகோபாலாச்சாரியார்

(ஆங்கிலம் பற்றிய மாநாட்டில்)

'வந்தாரை வரவேற்கும் பைந்தமிழர் பரம்பரையினர் நாங்கள்'

'நெஞ்சோடு நெஞ்சம் ஒன்றிப் பழகிச் செயல்படுவதுதான் ஒருமைப்பாடு'

அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, நவ. 7—

"ஒருமைப்பாடு பற்றி நாட்டில் அதிகமாகப் பேசப்படுகிறது; நெஞ்சோடு நெஞ்சம் கலந்து பழகிச் செயல்படுவதுதான் ஒருமைப்பாடு — திணிக்கப்படுவது அல்ல!"

என்று அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சீக்கியர் குருத்துவாரத்தில்—சீக்கியர் சங்கம் அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பாஞ்சாலத்தின் வீரமக்கள் நீங்கள்—சமரசக் கவிக்குயில் கபீர் பிறந்த நாட்டைச் சார்ந்தவர்கள்!

நாங்களோ, வந்தாரைவரவேற்று விருந்தளிக்கும் பைந்தமிழர் பரம்பரை!

வீரக் காவியங்கள் பல நிகழ்ந்தது பாஞ்சாலத்தில்! விடுதலைப் போராட்டத்தின் வீரமணம் கமழ்ந்தது பாஞ்சால மண்ணில்! லாலா லஜபதி ராயும், பகத் சிங்கும் தோன்றி தீரச் செயல் புரிந்த இடம் பாஞ்சாலம்!

எங்கள் நாட்டிலும் அத்தகைய வீரர்கள் இருந்திருக்கிறார்கள்!

அத்தகைய ஒற்றுமை உணர்வு காரணமாக நீங்கள் இங்கே வந்து—எங்களில் ஒருவராக வாழத் தலைப்பட்டிருக்கிறீர்கள்!

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பொன்னேபோல் போற்றும் அண்ணாவின் ஆட்சியில் உங்கள் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என உறுதி கூறுகிறேன்."

லோகியாவுக்குப் பதில் புதிய தலைவர்!

ச. சோ. கட்சி முயற்சி

லக்னோ, நவ. 6—

அனைத்திந்திய சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் (எஸ். எஸ். பி.) மாநாடு, பீகாரில் கயாவில் டிசம்பர் 29-ந்தேதியிலிருந்து சனவரி 2-ந் தேதி வரையில் நடைபெறும்.

அம்மாநாடு எஸ். எம். ஜோஷி தலைமையில் நடைபெறும்; சுமார் 2,000 பிரதிநிதிகள் அதில் கலந்து கொள்வர்.

காலஞ்சென்ற டாக்டர் ராம் மனோகர் லோகியாவுக்குப் பதில் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பது அம்மாநாடு கவனிக்கும் பல பணிகளில் ஒன்றாக இருக்கும்.

மது லிமாயி, ராஜிநாராயண் சிங், ஜார்ஜ் பெர்னாண்டஸ், பலேஷ்வர் ராவ், எஸ்.எம். ஜோஷி ஆகியோரில் ஒருவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி—பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி ஆகிய இரண்டும் இணைவது பற்றிய பேச்சுவார்த்தைகளும் அந்த ஐந்து நாள் மாநாட்டில் பரிசீலிக்கப்படும்.

70 புதிய திட்டங்களுக்கு நிதியுதவி கோருகிறது இந்தியா

66 கோடி டாலர் கிடைக்குமா ?

கடன் தரும் நாடுகளின் எண்ணப் போக்கு !

புதுடில்லி, நவ. 7—

இந்தியாவுக்குப் பொருளாதார உதவி அளிக்கும் பல நாடுகள் அடங்கிய இந்திய உதவிச் சங்கத்திடம், இந்தியா அடுத்த ஆண்டுக்கென 70 திட்டங்களுக்கு நிதி உதவி கோருகிறது.

குறிப்பிட்ட திட்டங்களுக்கென 66 கோடி டாலர் அளிக்குமாறும், அத்துடன் வழக்கமாக அளிக்கும் திட்ட வேலைப் பிணைப் பற்ற நிதி உதவியாக 90 கோடி டாலர் அளிக்குமாறும், உலக பாங்கையும், உதவிச் சங்கத்தில் அடங்கிய நாடுகளையும் இந்தியா வற்புறுத்துவதாகத் தெரிகிறது. திட்ட வேலைக்கான நிதி உதவியைத் தாராள நிபந்தனைகளில் அளிக்குமாறும் கோருகிறது.

அத்திட்ட வேலைகளில் விவசாய அபிவிருத்தியிலிருந்து கல்பாக்கம் அணுமின்சார நிலையம் உட்பட பல திட்டங்கள் அடங்கியுள்ளன ; விவசாய வளர்ச்சிக்கென 15 கோடி டாலர் கேட்கப்படுகிறது.

ஆழ்கடல் மீன்பிடிக்கும் திட்டத்துக்கும் முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், உர உற்பத்தி—பூச்சி மருந்து உற்பத்தி ஆகியவற்றுக்கும், உருக்கு, கலப்பு உருக்கு, விசேட சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உதவி கோரப்பட்டுள்ளது.

பண்ட இறக்குமதிக்கு இன்னமும் கணிசமான அளவுக்கு அந்நியச் செலாவணி தேவைப்படுவதால், திட்ட வேலைகளுக்கென்று நிதி உதவி கிடைக்குமா என்பதில் ஓரளவு நிச்சயமற்ற நிலை உள்ளது.

எனினும் தாங்கள் உதவி அளிக்கத்தக்க வகையில் புதிய திட்ட வேலைகளின் பட்டியலை அளிக்குமாறு ஜப்பான் போன்ற பல நாடுகள் இதுவரை வற்புறுத்திவந்துள்ளன. இது திட்ட வேலைகளுக்கு நிதி உதவி கிடைப்பதற்கான ஒரு சாதக அம்சமாகும்.

தாங்கள் அளிக்கும் உதவி குறிப்பிட்ட திட்டங்களுக்குச் செல்கிறது என்று கூறி அந்நாடுகள் தங்களுடைய நாடாளுமன்றத்தை நிதி உதவிக்கு இணங்கச் செய்ய முடியும். திட்டங்களைக் காட்டி, 'அவை, நம் உதவியுடன் கட்டப்பட்டவை' என்று பெருமையாகக் கூறிக்கொள்ள முடியும் ; எனவேதான், அந்நாடுகள் புதிய திட்ட வேலைகளை ஆரம்பிக்குமாறு இந்தியாவை வற்புறுத்திவந்தன.

ஆனால் பண்ட உதவியானது பயன்படுத்தப்பட்டு தீர்ந்துவிடுவதால், அதை அந்த நாடுகள், 'இது, நம் உதவியின் அடையாளமாக நிற்பதாகும்' என்று கூறிக்கொள்ள முடிவதில்லை.

'இலக்கியமற்ற இந்தி ஆட்சி மொழியாக இருக்க இயலாது'

சி. டி. தேஷ்முக் தெளிவுரை

சென்னை, நவ. 7—

"இந்தி, ஆட்சி மொழியாக—நிர்வாக மொழியாக இருப்பது என்பது இயலாது ; அதனுடைய இலக்கியங்களும் மிகக் குறைவானவை !

"இந்தியாவின் பொது மொழியாக — தேசிய மொழியாக இத்தி ஆவது என்பது, வெறும் பகற்கனவாகும் !''

இவ்வாறு முன்னாள் மத்திய நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக், இங்கு நடைபெற்ற ஆங்கிலம் பற்றிய கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

"நாட்டின் நலனைக் கருதியும், வட்டார மொழியின் வளர்ச்சிக்காகவும் ஆங்கிலத்தில் நமக்குள்ள பிடிப்பை விட்டுவிடக்கூடாது ''

என வலியுறுத்திய அவர், மேலும் விளக்கியதாவது :—

"அறிவுத் திறன் வாய்ந்தவர்கள் கட்டத்தில் ஆங்கிலம், அனைத்திந்தியக் கடிதப் போக்குவரத்துக்கு உதவும மொழியாக இருப்பதற்குத் தகுதி வாய்ந்தது. இந்தப் பிரச்சினையில், இந்தி, வேறு எந்த வட்டார மொழிகளைப் பார்க்கிலும் வளர்ச்சியடைந்துள்ளதாகக் கூற முடியாது.

மற்ற வட்டார மொழிகளிலிருந்து சொற்களைத் துரிதமாகக் கையாண்டு, இந்தி, அனைத்திந்திய மொழியாக வளர்ச்சியடைந்துவிடவில்லை ; ஆகவே, கால வரையறையின்றி மாநிலங்களிலும், மத்தியிலும்—நாட்டின் நலன்களைக் கருதி — ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டியது அவசியம்.''

தேவையை நிறைவு செய்யும் ஆற்றல் எவ்வாறு இயலும் ?

கருத்தரங்கில் விளக்கம்

ஆள் பலத்தின் தரம் உயரவும், தேவைக்கு ஏற்ப ஆள்பலத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்குமான வழிவகைகளை, டாக்டர் ஜான் பி. லூயிஸ் என்பவர், இங்கு நடந்த கருத்தரங்கில் விளக்குகையில் குறிப்பிட்டதாவது :—

அமெரிக்காவுக்குச் சென்று வந்தவர்களுக்காக நடத்தப் பெற்ற கருத்தரங்கு இது.

"ஆள் பலப் பிரச்சினை பெரும்பாலும் தொகையைப் பற்றியதல்ல—தரமான பயிற்சி, தேவைக்கு ஏற்பப் பயன்படுத்துதல் பற்றியதாகும்.

"அமெரிக்காவிலும், இந்தியாவிலும் நிறையத் திறமைசாலிகள் இருக்கின்றனர் ; இவ்விரு நாடுகளின் தேவைகளை நிறைவு செய்யப் பயிற்சி அளிக்கவேண்டும்.

"ஆள் பலத்தைத் தகுந்தபடி பயன்படுத்துவதற்கு ஆதாரமாக இருப்பவை, பயிற்சியில் நெளிவு சுளிவும் தேவையை நிறைவு செய்யும் ஆற்றலுமாகும் ; இதற்குத் தகுந்த ஊதிய அமைப்பும் தொழில் நுட்ப ஆலோசனை தரக்கூடிய நிறுவனங்களும் அவசியம்.''

தமிழக அரசுக் கல்வி—தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமைவகித்துப் பேசுகையில் பொதுக் கல்வியின் தரத்தை உயர்த்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார் ; 'தொழில் நுட்பசாலிகளைப் பெருக்குவதற்கு இது முதல் தேவை' என்றார்.

"இந்த நாட்டிலே பொதுக் கல்வியின் தரம் உயருமானால் சிறப்புக் கல்வி அளிப்பது சுலபமாக இருக்கும் ; அதோடு, சுகாதார ஊழியர்கள், குடும்பக் கட்டுப்பாடு ஊழியர்கள் ஆகியோரின் பயிற்சிகளிலும் முன்னேற்றம் காண முடியும் '' என்றும் அவர் குறிப்பிட்டார்.''

'குழப்பம்' எனக் காரணம் காட்டி...!

சென்னை, நவ. 7—

"ஆங்கிலத்தைத் தூக்கியெறிந்துவிட்டு – கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் வட்டார மொழிகளைப் பாட மொழியாக்கிவிட்ட பிறகு–ஆளும் வர்க்கத்தினர், 'இப்போது நிர்வாகத் துறையில் பல்வேறு மொழிகள் இருப்பதால், ஒரே குழப்பமாக இருக்கிறது ; நாம் இந்தியைக் கற்றுக்கொண்டு, அதை இணைப்பு மொழியாகவோ, தேசிய மொழியாகவோ ஆக்கிவிட வேண்டும்' என்றுதான் சொல்லுவார்கள் !''

பேராசிரியர்
--எம். இரத்தினசாமி
(ஆங்கிலம் பற்றிய மாநாட்டில்)

செந்துறையில் சீரணியினரின் பணி

செந்துறை ஊராட்சி ஒன்றியத்தாரால் செந்துறை கிராமத்தில் 25—10—67 காலை 9 மணியளவில் சீரணிப் பணி துவக்க விழா அரியலூர் கோட்டாட்சித் தலைவர் கே. கோவிந்தராசனால் துவக்கி வைக்கப்பட்டது.

சீரணி அமைப்பின் நோக்கத்தை செந்துறை ஊராட்சி ஒன்றிய ஆணையர் வெ. கிருஷ்ணசாமி பி.எஸ்சி., கல்வி வளர்ச்சி அலுவலர், உரப்பெருக்கு ஆய்வாளர் ஆகியோர் பேசினர்.

33 சீரணித் தொண்டர்களால் செந்துறையில் உள்ள பெரிய ஏரி வரத்து லாரியில் சுமார் 60 அடி நீளமுள்ள கரை உடைப்பும் செப்பனிடப்பட்டது.

பெண் ஆசிரியை குடியிருப்பு இல்லம் திறப்பு விழா

செந்துறை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அசாவீரன்குடிக்காடு ஊராட்சியிலுள்ள குறிச்சிக்குளம் கிராமத்தில் பெண் ஆசிரியை குடியிருப்பு இல்லத் திறப்பு விழா, 25—10—67 மாலை 5 மணி அளவில் செந்துறை ஊராட்சி ஒன்றியம் பெருந்தலைவர் நா. வை. வேங்கடாசலனார் தலைமையில் அரியலூர் கோட்டாட்சித் தலைவர் கே. கோவிந்தராசன் திறந்து வைத்து ஆசிரியைகளுக்கு மட்டும் குடியிருப்புக் கட்டிக் கொடுப்பதன் நோக்கத்தையும், அரசினர் அதற்கு முக்கியத்துவம் அளிப்பதன் அவசியத்தையும் விளக்கிக் கூறினர். செந்துறை ஊராட்சி ஒன்றிய ஆணையர் வெ. கிருஷ்ணசாமி சிறப்புச் சொற்பொழிவாற்றினார். ஊராட்சி ஒன்றியப் பொறியர் நெவிலி ஆரான் டேவிஸ் அவர்களும் விழாவில் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணராயபுரத்தில் சீரணியின் சிறப்புப் பணி

24—10—67-ல் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருக்காம்புலியூர் கிராமத்தில் சீரணித் தொண்டர்கள் துப்புரவுப் பணியை மேற்கொண்டனர். ஊராட்சி ஒன்றிய ஆணையர் அ. ரெங்கசாமி, சீரணித் தொண்டர்கள் ஆற்றவேண்டிய பணிகளையும், பொதுமக்கள் பொறுப்புக்களையும் எடுத்துக்கூறினர்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் படத்தை கல்வி விரிவாக்க அலுவலர் குமாரசாமி திறந்துவைத்தார்.

ஊராட்சி மன்றத் தலைவர் தங்கராசு, சீரணியின் ஆக்கப்பணிகளைப் பாராட்டி, பொதுமக்கள் இத்தொண்டில் பங்குகொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறினார்.

20 சீரணித் தொண்டர்களுடன் ஊர் மக்கள் 50 பேரும் சேர்ந்து கூட்டு உரக் குழிகளுக்குச் செல்லும் பாதை (1½ பர்லாங்கு) அமைத்தனர் ; கூட்டு உரக் குழி ஒன்று வெட்டினர் ; புற்புதர்களை அகற்றினர் ; விமானம் செல்லும் பாதையைச் சீரமைத்து அங்குள்ள புற்புதர்களை அகற்றி உட்காருவதற்கு இலாயக்கான இடம் அமைத்து நிழல் தரும் மரங்களை நட்டனர்.

மாலையில், திருக்காம்புலியூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த பசுந்தாள் உரப் பண்ணையில் 1,000 கிளரிக்டியா, கொடி பூவரசுக் குச்சிகள் நட்டனர்.

ஊர்ப் பொதுமக்கள் சீரணியினர் தொண்டைப் பாராட்டியதுடன் அவர்களுக்குப் பகல் உணவு அளித்துச் சிறப்பித்தனர்.

'பறக்கும் தட்டு'கள்

ராக்கெட் நிபுணர் கணிப்பு

"பறக்கும் தட்டுகள், அண்மையில் உள்ள கிரகங்களிலிருந்து வருவதாக நான் கருதவில்லை ; சூரிய மண்டலத்திற்கும் அப்பாலுள்ள கிரகங்களிலிருந்துதான் அவைகள் வந்துகொண்டிருப்பதாகக் கருதுகிறேன். அந்தக் கிரகங்களின் விண்வெளி வீரர்களைச் சேர்ந்த மக்கள் வாழ்க்கையை நீடிக்கச் செய்வதற்குரிய விஞ்ஞான முறைகளில் கைதேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் ''

இவ்வாறு அடையாளம் கண்டு கொள்ள முடியாத 'பறக்கும் தட்டு'களைப் பற்றி விவாதிப்பதற்காக நடைபெற்ற நிபுணர்கள் மாநாட்டில் பேசுகையில், பிரபல ராக்கெட் நிபுணர் ஹெர்மன் அபரித் என்பவர் கூறியிருக்கிறார்.

"பூமியில் வாழும் மனிதர்களைக் காட்டிலும், நாகரிகத்தில் முன்னேறியுள்ளவர்கள் வசிக்கும் கிரகங்களிலிருந்துதான் 'பறக்கும் தட்டு'கள் வருகின்றன '' என்றும் அவர் குறிப்பிட்டார்.

முறையற்ற வாதங்கள் !

சென்னை, நவ. 7—

"'ஆங்கிலம் வேண்டாம்' என்று கூறுபவர்கள், 'அது அந்நிய மொழி ; பாமர மக்களுக்கும்—படித்தவருக்கும் இடையே ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தும் மொழி ; நிர்வாகத்திற்கென்று தேசிய மொழி ஒன்று வேண்டும் ; அரசியல் சட்டரீதியான ஆங்கிலம் அகற்றப்பட வேண்டும்' எனக் கூறுகின்றனர் !

"மொழிக்கு வேறுபாடு கிடையாது ; 14 மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன ; ஆனால், இந்த 14 மொழிகளையும் பேசாத மக்கள் இலட்சக்கணக்கில் உள்ளனர் ; அவர்களுக்கு இந்த 14 மொழிகளும் அந்நிய மொழிகள் ஆகாதா ? எனவே, 'ஆங்கிலம் அந்நிய மொழி' என்ற வாதம் அடிபட்டுப் போய்விடுகிறது !

"ஒரே ஒரு நபர் பேசும் மொழிகூட நம் நாட்டில் இருக்கிறது ; 'படித்தவர்—பாமரர்' என்ற ஏற்றத் தாழ்வு அன்றும்தான் இருந்தது; ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி வந்தால் மட்டும் அந்த வேறுபாடு போய்விடுமா ? எனவே, இரண்டாவது வாதமும் சரியல்ல !

"'அரசியல் சட்டப்படி, ஆங்கிலம் நீங்க வேண்டும்' என்கின்றனர் ; அரசியல் சட்டத்தில், ஆட்சி மொழி பற்றிய பிரச்சினைகளில்தான் அந்த நியதி இருந்தது ; 'சட்டம், நீதித்துறைகளில் ஆங்கிலம் இருக்கலாம்' என்று இருக்கிறது ; எனவே, அந்த வாதமும் செல்லாது !''

---கே. சுப்பா ராவ்
(தலைமை நீதிமன்ற முன்னாள் நீதிபதி ; ஆங்கிலம் பற்றிய மாநாட்டில்)

பம்பாயில் தமிழகக் கழகத் தோழர்கள்

ஆ. திராவிடமணி, தமிழ்மாறன் எம். கே. இராமசாமி பங்கேற்ற நிகழ்ச்சிகள்

12—10—67 பிற்பகல் 3-மணியளவில் பம்பாய் (தாதர்) இரயில் நிலையத்தில், கடையநல்லூர் ஆ. திராவிடமணி, வத்தலக்குண்டு தமிழ்மாறன், மதுரை எம். கே. இராமசாமி ஆகியோருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரவு 7-மணியளவில் கொலபா, தி. மு. க. சார்பில் தோழர் வள்ளுவன் வரவேற்புரையாற்ற—கே. ஏ. டேவிட் தலைமையில் மீரமார் ஓட்டல் திறந்தவெளியரங்கில் பொதுக்கூட்டம் நடைபெற்றது,

தோழர்கள் ஆ. திராவிடமணி தமிழ்மாறன், எம். கே. இராமசாமி ஆகியோர், தமிழக அரசின் ஆட்சிச் சிறப்புக்களை எடுத்துரைத்தனர்.

தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, நெல்லை செழியன், வள்ளிநாயகம், கே. கே. இராமநாதன், மற்றும் பலர் பேசினர்.

தோழர் முனியாண்டி நன்றி நவின்றார்.

13—10—67 அன்று அறிஞர் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் சோகேசுவரி பகுதியில் இரவு 7-மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் ஆ. திராவிடமணி, தமிழ்மாறன், எம். கே. இராமசாமி ஆகியோர் அண்ணாவின் சிறப்பியல்புகளை விளக்கிப் பேசினர்.

மற்றும் தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, நெல்லை செழியன், சிதம்பரம். திருமலை நம்பி, வள்ளுவன், மற்றும் பலர் பேசினர்.

14—10—67 இரவு 7-மணியளவில் தாராவி கணேசர் ஆலயத் திடலில் கு. பாலன் வரவேற்புரையாற்ற—சேரை மு. இராசகோபாலன் தலைமையில் சத்தியவாணிமுத்து படிப்பகத் துவக்க விழா நடைபெற்றது. மன்றத்தைத் தோழர் த. மு. பொற்கோவும், சத்தியவாணிமுத்து அம்மையார் படத்தை எஸ். தியாகராசனும் திறந்து வைத்தபின், தோழர்கள் ஆ. திராவிடமணி, தமிழ்மாறன், எம். கே. இராமசாமி ஆகியோர் பேசினர்.

தோழர் இராமு நன்றி நவின்றார்.

அறிஞர் அண்ணா மன்றத்தின் சார்பில் 15—10—67 இரவு 7-மணியளவில் தோழர் கிருட்டிணன் வரவேற்க—சிங்காரவேலன் தலைமையில் மாதுங்கா லேபர் கேம்பில் பொதுககூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் ஆ. திராவிடமணி, தமிழ்மாறன், எம். கே. இராமசாமி ஆகியோர் அண்ணாவின் அறிவாற்றலைத் தெளிவுபடுத்தினர்.

மற்றும் நெல்லை செழியன், எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, வள்ளிநாயகம், வள்ளுவன் மற்றும் பலர் பேசினர்.

16—10—67 அன்று செம்பூர் பகுதியில் தோழர் பெருமாள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் புத்தரசு வரவேற்புரையாற்றியபின், ஆ. திராவிடமணி, தமிழ்மாறன், எம். கே. இராமசாமி, எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, நெல்லைச் செழியன் மற்றும் கழகத் தோழர் பலர் பேசினர்.

17—10—67 அன்று தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில், தோழர் வள்ளிநாயகம் தலைமையில் வி.கே. வாடியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது ; கலைச்செல்வன் வரவேற்புரையாற்றினார். நெல்லை செழியன் அண்ணா படத்தைத் திறந்து வைத்தார் ; தோழர்கள் ஆ. திராவிடமணி, தமிழ்மாறன், எம். கே. இராமசாமி, மற்றும் பலர் உரையாற்றினர்.

தோழர் மா. தியாகராசன் நன்றி கூறினார்.

‘வன்முறைக்கு இடந்தரமாட்டோம்’

‘சட்டபூர்வ உரிமைகளைக் காப்பாற்ற கழக அரசு முன்னணியில் நிற்கும்’

‘வழிமுறைகளைத் தொழிலதிபர்கள் வகுத்துத் தந்தால் ஆய்வுக்கு எடுக்கத் தயங்கோம்’

தொழிலாளர்நல அமைச்சர் மாதவன் உறுதி--தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைபற்றி விளக்கம்

சென்னை, நவ. 7—

“வன்முறை, பயமுறுத்தல்—என்றெல்லாம் பொதுவாகத்தான் சொல்லப்படுகிறது; வன்முறையைப் பற்றிப் போலீசாருக்குப் புகார் செய்து அதை அவர்கள் நிராகரித்துவிட்டார்கள் என்று இதுவரை எந்த அதிபரும் சொல்லவில்லை!

“இப்போதுள்ள தி.மு. கழக ஆட்சியில், ‘நம்முடைய உரிமைகளைப் போலீசார் பறித்துவிட மாட்டார்கள்’ என்று தொழிலாளர்கள் நினைக்கிறார்கள்; அதேபோன்று, ‘முந்திய அரசு நமக்கு நெருக்கமாக இருந்தது; இப்போதைய அரசு நெருக்கமாக இல்லை’ என்று தொழில் அதிபர்கள் நினைக்கிறார்கள்!

“இப்போதுள்ள அரசு தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமைகளைக் காப்பாற்றும்—தொழிலாளர்களின் விரோதி அல்ல; அதே சமயம் நிர்வாகிகளின் விரோதியுமல்ல!

“இப்போதுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்குத் தொழிலதிபர்கள் குறிப்பிட்ட ஏதாவதொரு வழிமுறையை வகுத்துத் தருவார்களானால், அரசு அதனை ஆய்வு செய்யத் தயார்!

“சென்னையில், ஆளுங்கட்சிக்கும்—இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுக்குமிடையில் தேர்தல் உடன்பாடு இருந்ததால், தொழில் தகராறுகளில் அவர்கள் கை ஓங்குவதற்கு அரசு விட்டுவிடுமென்று சில தொழிலதிபர்கள் நினைக்கிறார்கள்; ‘இப்போதைய நிலை நீடித்தால் மேற்கு வங்காளத்தில் நடந்ததுபோல் இங்கும் நடக்கும்’ என்று சிலர் சொல்கிறார்கள்; இதையும் அதையும் ஒப்பிடுவதற்கு இடமில்லை; தொழிலாளர்கள் வன்முறையாகவோ, முறை தவறியோ நடந்துகொண்டார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்கத் தயங்காது.”

இவ்வாறு, சட்ட—தொழிலாளர் நல அமைச்சர் செ. மாதவன் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெளிவுற விளக்கினார்.

தமிழ்நாட்டில் தொழில் துறையில் உள்ள நிலவரங்கள் குறித்து அமைச்சர், தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார்; அதுபோது, தொழிலதிபர்களுக்கும்—தொழிலாளர்களுக்குமிடையில் நிலவும் உறவு நிலை பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டது. ஆலோசனைக்குப் பின், செய்தியாளர்களிடம் அமைச்சர் தெரிவித்ததாவது:—

தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இரண்டு முக்கியப் பிரச்சினைகளை என்னிடம் எடுத்துரைத்தனர்; (1) மாநிலத்தில் எவருடைய தூண்டுதலின்பேரிலாவது தொழிலாளர் அமைதியின்மை புதிதாகத் தோன்றியிருக்கிறதா? (2) இப்போது தொழில் தகராறுகள் ஏற்பட்டுள்ளனவென்றால், அதற்கு யார் பொறுப்பாளி—இவ்விரு முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடந்தது.

அண்மையில் அளிக்கப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்புக்களைப் பற்றி தொழிலாளர் தலைவர்கள் குறிப்பிட்டனர்; ‘அலுவலக நேரத்தில் அல்லாமல் மற்ற வேளைகளில் உள்ளிருப்பு வேலை நிறுத்தங்கள் செய்வது சட்ட விரோதம்’ என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு கூறியதை அவர்கள் முக்கியமாகச் சுட்டிக்காட்டி, ‘தொழிலாளர்கள் நீண்ட நாட்களாகக் கையாண்டுவரும் தொழிற் சங்க உரிமையை ரத்து செய்வதாக இது இருக்கிறது’ எனக் கூறினர்; ‘குறித்த நடவடிக்கை எடுக்குமாறு போலீசு அதிகாரிக்கு நேரிடையாக உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கலாமா?’ என்ற பிரச்சினையை, தொழிலாளர் தலைவர்கள் எழுப்பினர். ‘இது, மாநில அரசின் நிர்வாக அதிகாரத்தில் உயர் நீதிமன்றம் தலையிடுவதாகாதா?’ என்றும் கேட்டனர்.

தொழிலாளர் தகராறு அதிகமாக இருக்கிறதென்று சிலர் கூறுவதற்கு, ‘அரசியல் நோக்கம்தான் பொதுவாக காரணமாகும்’ என்று பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

தொழிலாளர் தகராறு எல்லா இடங்களிலு மிருக்கிறதென்றும், தமிழகத்தில் இன்னும் எவ்வளவோ போராட்டங்களை ஆரம்பித்திருக்கலாமென்றும், தி. மு. கழக அரசு பதவியிலிருப்பதால் செய்யாமல் இருந்துவிட்டதாகவும் சிலர் தெரிவித்தனர்.

‘உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் சரியானவை; அவை சம்பந்தமாக மேல் நடவடிக்கை ஏதும் அவசியமில்லை’ என்று இ. தே. தொ. ச. கா. பிரதிநிதி ஒருவர் மட்டும்தான் கருதினார்.

“வேலை நேரம் முடிந்த பிறகு உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதம்—என்று உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து அரசு அப்பீல் செய்யவேண்டும்’ என்றும் பெரும்பாலோர் தெரிவித்தனர்.

“உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு முழுவதையும் நான் படிக்கவில்லை; முழுவதையும் படித்த பின் அரசின் முடிவுக்கு விடப்படும்; தனிப்பட்ட அதிகாரிக்கு உயர் நீதிமன்றம் நேரடியாகப் பிறப்பிக்கும் உத்தரவு மாநில அரசின் உரிமைகளைப் பாதிக்கிறதா என்பது முக்கியமாகக் கவனிக்கப்படும்; தொழிற் சங்கத் தலைவர்கள்—அரசியல் கட்சித் தலைவர்கள்—தொழிலதிபர்கள் ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைப் பற்றி முதல்வரிடம் தெரிவிக்கப்படும்.

அரசு எந்த முடிவு செய்தாலும் அதன்படி நடப்பதாகத் தலைவர்கள் வாக்களித்தனர்; ‘பலாத்காரத்தில் இறங்க வேண்டுமென்று தொழிலாளர்கள் விரும்பவில்லை; சட்டம், அமைதி நிலையைக் குலைப்பது—அரசின் எந்த உத்தரவையும் மீறுவது போன்றவைகளையும் நாங்கள் மீறமாட்டோம்’ என்றும் அவர்கள் உறுதி கூறியிருக்கின்றனர்.”

“‘கேரோ’வைப் பற்றி மாநாட்டில் என்ன கருத்து நிலவியது?” என்று நிருபர்கள் கேட்டனர்.

“சில தலைவர்கள் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். கம்யூனிஸ்டுக் கட்சியினர், ‘கெரோ’ கொள்கையை ஒப்புக்கொள்கிறார்கள்; ஆனால், ‘அத்தகைய நடவடிக்கைகளில்ஈடுபடவில்லை’ என்று சொன்னார்கள்.

தொழிலாளிகள் பலாத்காரத்தில் இறங்கும்போது போலீசார் பார்த்துக்கொண்டிருந்ததாகப் புகார் செய்யப்பட்டது; ‘பலாத்காரமே நடக்கவில்லை’ என்று தலைவர்கள் அடியோடு மறுத்தனர்.

‘பலாத்காரம்’ என்று கருதக்கூடிய விதத்தில் ஏதாவது நடந்தால்கூட, போலீசார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள்; ‘கேரோ’வும் இதன் கீழ் வரும்!

போலீசார் தொழிலாளிகளுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்றும், சில இடங்களில் தடியடி நடத்துகிறார்களென்றும் திருச்சி போன்ற ஊர்களிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன!

தமிழ்நாட்டில் கைத்தொழில் வளர்ச்சி சீராக நடைபெற வேண்டுமென்றும், அத்துறையில் அமைதி நிலவ வேண்டுமென்றும் அனைவரும் ஒப்புக்கொண்டனர்; ஆனால், ‘இதற்கு முன்பு செய்யாத எதையும் இப்போது செய்துவிடவில்லை’ என்று அவர்கள் கூறுகின்றனர்.

எங்கு பலாத்காரம் நடந்தாலும் அங்கு தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு போலீசுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது; எங்கேயாவது போலீசு அப்படிச் செய்யவில்லை என்றால் அது, அவர்களுடைய தவறாகும்!

“தனிப்பட்டவர்களின் வீடுகள் எதிரில் எவரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்த இடந்தரக்கூடாது” என்று போலீசுக்கு அரசு அண்மையில் சுற்றறிக்கை அனுப்பிபட்டிருக்கிறது.

முக்கூட்டு மாநாடு ஒன்று கூட்டுவது பற்றி அரசு ஆய்வு செய்யும். தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு சமரச முறை ஒன்றே சிறந்தது.

பிற மாநிலங்களைவிட தமிழகத்தில் இரு தரப்பினருமே ஒத்துழைப்பு மனோநிலையைக் காட்டுவதைப் பாராட்டுகிறேன். இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி ஒரு அரசியல் கட்சி; அதைத் தடை செய்யவேண்டுமானால் மத்திய அரசைத்தான் கேட்க வேண்டும்.

தொழிற்சங்கங்கள் அரசியல் பிணைப்பு இல்லாமல் பணியாற்ற வேண்டும்; ‘ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்’ என்ற முறை வளர வேண்டும்.”

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8--11--67

ஆத்தூர்

தி. மு. கழகச் சார்பில் இரவு 8 மணிக்கு; பேருந்து நிலையத் திடலில்; தலைவர்: ஏ. மாரிமுத்து; பேசுவோர்: அமைச்சர் மா. முத்துசாமி, ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ., எம். தெய்வீகம் எம்.பி., கே. என். சிவப்பெருமாள் எம்.எல்.ஏ., எம். மாரிமுத்து எம்.எல்.ஏ., டி. கே. மாதவன்.

நாச்சியார்கோவில்

தி. மு. கழகச் சார்பில் மாலை 6 மணிக்கு வடக்கு வீதியில்; தலைவர்: கே. தம்புராசு; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி, சு. பத்மநாபன், ந. சாமிநாதன், அ. சர்புதீன், மு. இசுமத்பாட்சா, தி. இராமலிங்கம், இரா. கேசவன், வி. கே. இராமசாமி, எம். பன்னீர்செல்வம், எஸ். எம். சலாபுதீன்.

ஆத்தூர் வட்டத்தில்

அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

நவ. 8: காலை 7 மணி: நரசிங்கபுரம்—திருமணம்; 8 மணி: ஏத்தாபூர் பேரூராட்சிமன்ற வரவேற்பு; 8-30 மணி: ஆத்தூர் ஆர். சி. பள்ளியில் ஆத்தூர் வட்டாரக் கிளை ஆசிரியர் கூட்டணி சார்பில் தீ நிவாரண நிதி அளித்தல்; 9 மணி: கெங்கவல்லி ஊராட்சி ஒன்றிப்பு வரவேற்பு; 9-30 மணி: தெடாவூர் மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்புவிழா; 10 மணி: ஒதியத்தூர் ஊராட்சிமன்ற மேல்நிலை தண்ணீர் தொட்டி திறப்புவிழா; 10-30 மணி: சாத்தப்பாடி ஊராட்சிமன்ற வரவேற்பு; 11 மணி: காமக்காபாளையம் கூட்டுறவு நாணய சங்க கிடங்கு திறப்புவிழா; 11-30 மணி: தேவியாக்குரிச்சி ஊராட்சிமன்ற வரவேற்பு; பிற்பகல் 2-30 மணி: ஆத்தூர் ஊராட்சி ஒன்றிப்பு வரவேற்பு; 3 மணி: தாண்டவராயபுரம் எம்.ஜி.ஆர். மன்றத் திறப்பு—ஊராட்சிமன்ற வரவேற்பு; 3-30 மணி: மல்லியக்கரை ஊராட்சிமன்ற வரவேற்பு; மாலை 4-மணி: கீரிப்பட்டி பேரூராட்சிமன்ற வரவேற்பு, படத்திறப்பு; 5 மணி: உலிபுரம் பேரூராட்சி மன்றம் கூட்டுறவு நாணய சங்க வரவேற்புகள்; 6 மணி: செந்தாரப்பட்டி பேரூராட்சிமன்றம், கூட்டுறவு நாணய சங்க வரவேற்புகள்; அண்ணா படத் திறப்பு; இரவு 7-30 மணி: ஆத்தூர் பொதுக்கூட்டம்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள்” என்றும் அவர் தெரிவித்தார்.

“சென்னை மாநகராட்சி வட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு—வட்டங்களின் எண்ணிக்கை 120 ஆக அதிகரிக்கப்பட்டு—இதன் நகல் திட்டம் இப்போது மக்களின் கருத்தை தெரிந்துகொள்வதற்காக வெளியிடப்பட்டிருக்கிறது; வட்டப் பிரிவினைகள் இறுதியாகத் தீர்மானிக்கப்பட்ட பின்னர்தான் மாநகராட்சிக்கான தேர்தல்கள் நடைபெறும்” என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நியாய விலையில் மக்களுக்கு வெல்லம் -- பழுப்புச் சர்க்கரை

விற்பனை செய்வதற்கு அனுமதி பெறும் உத்தரவு பற்றி விளக்கம்

சென்னை, நவ. 5—

உணவு வழங்குதுறை ஆணையர், வெல்லம், பழுப்பு சர்க்கரை விற்பனை செய்வதற்கான அனுமதி பெற வழிமுறைகள் கூறி வெளியிட்டுள்ள அறிக்கையாவது:—

“வெல்லமும், பழுப்புச் சர்க்கரையும் நியாயமான விலைக்கு மக்களுக்குக் கிடைக்கவும், சர்க்கரை ஆலைகளுக்குக் கூடுதலாகக் கரும்பு கிடைப்பதற்கு வசதி செய்யவும், சென்னை உணவு வழங்குதுறை ஆணையர் கொடுத்துள்ள உரிமங்கள் இருந்தாலன்றி, அவர்களுடைய மாவட்டங்களுக்கு வெளியே உள்ளவர்களுக்கு வெல்லம், பழுப்பு சர்க்கரை விற்பனை செய்யக் கூடாது” என்று உரிமம் பெற்ற வெல்ல, பழுப்புச் சர்க்கரை வணிகர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

அனுமதி பெற விரும்பும் வணிகர்கள் உரிய விண்ணப்பத் தாள் மூலம் விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பத் தாள்களை மாவட்ட உணவு வழங்குதுறை அதிகாரியிடமிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்ட ஆளுநர்கள் அலுவலகங்களின் அறிவிப்புப் பலகைகளின் இந்த விண்ணத் தாள்களைக் காணலாம்.

வாங்குவோரும் விற்பனையாளரும், மாவட்ட உணவு வழங்குதுறை அதிகாரி மூலம்—அனுமதிக்கு, உணவு வழங்குதுறை ஆணையருக்கு மனுச் செய்துகொள்ளலாம்.

அக்டோர் புரட்சியின் துரோகி..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குற்றவாளிக் கூண்டுதான் அவர்களுக்கு இடமாகும்”

என்று சீனக் கம்யூனிஸ்டு ஏடு ‘பீபிள்ஸ் டெய்லி’ — இராணுவ நாளேடு ‘ரெட் பிளாக்’ ஆகிய இரு ஏடுகளும் கட்டுரை வெளியிட்டிருப்பதாக நவ சீனா செய்தி நிறுவனம் கூறுகிறது.

“அக்டோபர் புரட்சியின் பொன் விழாவை சோவியத் கொண்டாடுவது லெனினுக்கு அருவருப்பான அவமதிப்பு ஆகும்”

என்று, சீனக் கம்யூனிஸ்டு ஏடுகளின் கூட்டுக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] தெரு; சென்னை-[illegible]) [illegible]